வை. மகள் நலன்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத ஹூ தை மீ 22 உ திங்கட்கிழமை (04-02-1991) UTHAYAN - A LIVELY TAMIL NATIONAL DAILY கதிர்: 69

# வவுனியாவில் ஹெலி தாக்கி 3 மினிபஸ்கள் எரிந்து நாசம்!

## எரி குண்டுகள் வீசப்பட்டன

யாழ்ப்பாணம், பெப்ரவரி 4

நேற்றுக் காலை 7 மணியளவில் வவுனியா நொச்சிமோட்டை அருகே பரனாட்டான்கல் என்ற இடத்தில் ஹெலிக்கொப்டரிலிருந்துநடத்தப்பட்ட தாக்குதலில் மூன்று மினி பஸ்கள் எரிந்து நாசமாகின,

சம்பவம் நடந்த சமயம் அந்த மூன்று பஸ்களிலும் பயணிகள் எவரும் இருக்காததால் உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டன.

வவுனியாவில் பயணிகளை இறக்கிவிட்டு, பரனாட்டான்கல் பகுதியில் — வீதி ஓரத்தில் — தரித்து நின்ற பஸ்கள் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

முதலில் பஸ்கள் மீது ஹெலிக்கொப்டரில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து அப்பகுதியை வட்டமிட்ட ஹெலி, பின்னர் றொக்கட் தாக்குதலை நடாத்தியது.

திடீரென மூன்று] மினிபஸ்களும் தீப்பிடித்து எரிந்தன. அவற்றில் ஒன்று முற்றாக எரிந்து நாசமானது. மற்றைய இரண்டும் பெருமளவு சேதமுற்றன.

29 சிறி 6925, 30 சிறி 1750, 30 சிறி 6822 ஆகிய இலக்கங்களைக் கொண்ட மினிபஸ்களே தீக்கிரையானதாகத் தெரிவிக்கப்பட்டது. இந்த பஸ்கள் முறையே இருப்பிட்டி, கொக்குவில், உடுப்பிட்டி ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களுடையது என்றும் தெரிவிக்கப்பட்டது.

(உ)

## ஆனையிறவு பகுதியில் தொடர் குண்டு வீச்சு

நேற்றுக் காலை ஆறு மணி தொடக்கம் நண்பகல் வரை மூன்று பொம்மர்கள் ஆனையிறவு. இயக்கச்சி, புதுக்காடு, சங்கத்தார் வயல் பகுதிகளில் தொடர்ச்சியாகக் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

இயக்கச்சிக்கும் பளைக்கும் இடைப்பட்ட பகுதிகளில் சென்ற வாகனங்கள் மீதும் ஹெலி விடாது தாக்குதலை நடத்திக்கொண்டிருந்தது.

பொம்மர்கள் பளைப் பகுதியை வட்டமிட்டுச் சென்றதால் பளை நகரம் பகுதி நேற்று வெறிச்சோடிக் காணப்பட்டது.

இதேவேளை —

நேற்றுக் காலை 10-30 மணிக்கு கிளாலியிலிருந்து புலோப்பளைக்கு தேங்காய் ஏற்றிக்கொண்டு சென்ற டிராக்டர் மீதும் ஹெலி தாக்குதல் நடத்தியது.

(இ-117)

## ஆனையிறவு ஷெல்கள்

தென்மராட்சி, பெப். 4

நேற்று முன்தினம் இரவு ஆனையிறவு முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல்கள் பெரிய பளைப் பகுதியில் வீழ்ந்து வெடித்தன.

அதேதினம் பாலும் இயக்கச்சிப் பகுதியை நோக்கி ஷெல்கள் ஏவிவிடப்பட்டன.

(இ-117)

## மருதங்கேணியிலும் விமானத் தாக்குதல்

யாழ்ப்பாணம், பெப். 4

வடமராட்சி கிழக்கில் மருதங்கேணிப் பகுதியில் நேற்றுக் காலை 10 மணியளவில் இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சில் நால்வர் காயமடைந்தனர். இரண்டு வீடுகள் சேதமடைந்தன.

இந்தச் சம்பவத்தில் திருகோணமலையில் இருந்து அகதியாக வந்து தாளையடியில் தங்கியிருந்த இராமலிங்கம் காந்திதாஸ் (32 வயது), உடுத்துறையைச் சேர்ந்த செல்லத்துரை அருந்தவராசா (24 வயது) ஆகியோர் காயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஆழியவளையைச் சேர்ந்த பொன்னையா (45 வயது) சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

(இ-3-5-15)

## பெண்ணை தாக்கிய இராணுவம்

வவுனியா, பெப். 4

புளிச் சாக்குக்குள் கற்பூரத்தை மறைத்து வைத்துக் கொண்டு வந்த பெண் ஒருவர் வவுனியா இராணுவத்தினரால் பலமாகத் தாக்கப்பட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை இந்தச் சமபவம் இடம்பெற்றது.

கற்பூரத்தை பறித்தெடுத்த இராணுவத்தினர் அதைக் கொளுத்தி, வீதியில் விழுந்து கும்பிடுமாறு அந்தப் பெண்மணியைப் பணித்தனர்.

(இ-76)

## சங்குப்பிட்டித் துறையில் நேற்று ஹெலித் தாக்கு!

யாழ்ப்பாணம், பெப். 4

சங்குப்பிட்டி துறைப் பகுதியில் நேற்று]மாலை 6 மணியளவில் ஹெலிக்கொப்டர் ஒன்று கடும் தாக்குதலை நடத்தியது. அதனால் அப்பகுதியில் நின்ற மினிபஸ் ஒன்று சேதமடைந்தது. இருவர் சிறு காயங்களுக்கு இலக்காகினர்.

ஹெலிக்கொப்டர் தாக்குதல் நடத்தத் தொடங்கியவுடன் அப்பகுதியில் நின்ற பயணிகள் சிதறி ஓடினர்.

பலர் தத்தமது பொருள்களை அந்தந்த இடங்களிலேயே போட்டுவிட்டு நீரிணைப் பகுதிகளில் இறங்கி ஒளிக்க முற்பட்டனர்.

ஹெலி நீண்ட நேரம் வட்டமிட்டுத் தாக்குதல் நடத்திய போதும் உயிரிழப்பு ஏதும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

(உ-3)

## காயமடைந்தோருடன் வந்த வானைக் கலைத்து பொம்மர் குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், பெப். 4

மருதங்கேணியில் இடம்பெற்ற குண்டு வீச்சில் காயமடைந்தவர்களை யாழ் ஆஸ்பத்திரிக்கு ஏற்றி வந்த சமயம் அந்த வானைக் கலைத்து வந்த பொம்மர்கள் தாக்குதல்களை நடத்தின.

நேற்றுப் பகல் 12 30 மணியளவில் பளை, புதுக்காடு பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

தாக்குதல் நடத்துவதற்காக பொம்மர்கள் பதிந்து சுற்றிக் கொண்டிருந்ததால் வான் மறைவிடம் ஒன்றில் நிறுத்தப்பட்டது. வானில் இருந்த காயமடைந்தவர்களும் ஏனையோரும் வெளியே பாய்ந்து தப்பிக் கொண்டனர்.

பொம்மர்கள் குண்டுகளை வீசியபோதும் வான் சேதமடையவில்லை.

காயமடைந்தவர்கள் பின்னர் அவ்வழியால் வந்த அம்புலன்ஸில் யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்து சேர்க்கப்பட்டனர்.

(இ-3)

## கிளாலித் துறையிலும் படகுகள் சேதம்

தென்மராட்சி, பெப். 4

கிளாலித் துறையில் உணவுப் பொருள்களை ஏற்றிக் கொண்டு நின்ற லொறி மீது நேற்றுக் காலை எட்டு மணிக்கு ஹெலி ஒன்று தாக்குதல் நடத்தியது.

இத் தாக்குதலின் போது கரையில் நின்ற படகுகள் சில சேதமடைந்தன. கடைகளும் சேதமடைந்தன.

இதேவேளை முகமாலையிலிருந்து கிளாலிக்குச் சென்று கொண்டிருந்த டிராக்டரை நோக்கியும் நேற்று ஹெலி துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

(இ-117)

## பிளாஸ்டிக் 'கான்'கள் படையினரால் பறிப்பு

வவுனியா, பெப். 4

வவுனியாவில் பொதுமக்கள் கொண்டு வரும் உரப் பைகளும், பிளாஸ்டிக் 'கான்' களும் படையினரால் பறிமுதல் செய்யப்படுகின்றன.

நேற்று முன்தினம் வவுனியாவுக்கு ரயிலில் வந்தவர்களால் பிளாஸ்டிக் 'கான்' களில் எடுத்துவரப்பட்டிருந்த தேங்காய் எண்ணெய், மண்ணெண்ணெய் 'கான்' களும் படையினரால் பறிமுதல் செய்யப்பட்டன.

பயணிகள் கொண்டுவந்திருந்த பிளாஸ்டிக் வாளிகள் மற்றும் தண்ணீர் 'கான்' களும் கூடத் தப்பவில்லை.

பொதுமக்கள் இப்பொழுது தேங்காய் எண்ணெய், மண்ணெண்ணெய் போன்றவற்றை "சொப்பிங்" பைகளில் எடுத்து வருகின்றனர் ...

## கிளிநொச்சி நகரில்

யாழ்ப்பாணம், பெப். 4

நேற்றுக் காலை 6-45 மணியளவில் கிளிநொச்சி நகரில் இருந்து 155 ஆம் கட்டை வரையும் ஹெலி பரவலாக துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

அதேவேளை உமையாள்புரத்திலும் ஹெலி கண்டபடி தாக்குதலை நடத்தியது.

## சிப்பாய்கள் இருவர் பலி

யாழ்ப்பாணம், பெப். 4

நேற்று முன்தினம் பகல் 11 மணியளவில் மாவிட்டபுரத்தில் இடம்பெற்ற மோதலின் போது நடத்தப்பட்ட சினைப்பர் தாக்குதலில் இரு சிப்பாய்கள் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(இ)

## யாழ். பயணிகள் மீது கோட்டையில் தாக்கு!

யாழ்ப்பாணம், பெப். 4

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்குச் சமீபமாக கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை 5 மணியளவில் யாழ்ப்பாணம் வர நின்ற பயணிகள் கடுமையாகத் தாக்கப்பட்டனர்

பொல்லுகள், இரும்புக் கம்பிகளினால் இவர்கள் தாக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் தாக்கப்படும் சமயம் அப்பகுதியில் பொலீஸாரும் நின்றதாகத் தாக்குதலுக்கு இலக்காகி, நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணம் வந்த ஒருவர் தெரிவித்தார்.

கொழும்பு நகரில் இப்போது திடீர், திடீரென இப்படியான சம்பவங்கள் அடிக்கடி இடம்பெற்று வருவதாக அந்தப் பயணி மேலும் கூறினார்.

(இ-3)

## முச்சந்தி முரளி



தமிழர் பகுதியிலை பஸ்ஸு களை எரித்து ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கக்கொடி கட்ட இராணுவம் நிர்ப்பந்தம்!

கிளிநொச்சி, பெப். 4

வவுனியாவில் இருந்து நொச்சிமோட்டையை நோக்கி வரும் வாகனங்கள், சைக்கிள்கள் ஆகியவற்றில் சிங்கக்கொடி கட்டாயம் பறக்கவிடப்பட வேண்டும் என இராணுவத்தினர் நிர்ப்பந்திக்கின்றனராம்.

சிங்கக்கொடி இல்லாமல் வரும் வாகனங்கள் மற்றும் சைக்கிள் சொந்தக்காரர்கள் இராணுவச் சோதனைப்பகுதியில் வைத்து தாக்கப்படுகின்றார்கள்.

சிங்கக் கொடிகள் 10 ரூபாப்படி வவுனியாவில் விற்பனை செய்யப்படுகின்றன.

சுதந்திர தினத்தை முன்விட்டே இந்த ஏற்பாடு எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(ஒ-76)

# கூட்டாட்சி முறையின் ஆணிவேர் பாதிப்பு

## கலைப்புக் குறித்து சிங்

சென்னை, பெப். 4

தி. மு. க. அரசு கலைப்பினால் இந்தியக் கூட்டாட்சி முறையின் ஆணிவேரே பாதிக்கப்பட்டிருப்பதாக முன்னாள் பிரதமர் வி. பி சிங் நேற்று சென்னையில் தெரிவித்தார்.

இந்திரா காங்கிரஸ் அ.தி.மு.க கொடுத்த நிர்ப்பந்தம் காரணத்தினால்தான் தி.மு.க அரசு கலைக்கப்பட்டதாகத் திரு. வி.பி.சிங் சொன்னார்.

இது போன்ற ஜனநாயக விரோத நடவடிக்கைகளில் மத்திய அரசு ஈடுபடாமலிருப்பதற்காக இந்திய அரசியல் சட்டத்தில் உள்ள 356 ஆவது பிரிவை நீக்கவேண்டிய காலம் வந்துவிட்டது என்றும் திரு. சிங் தெரிவித்தார்.

(அ-எ)

# கூ. ச. ஊழியர் பாதிப்பு; உதவி கேட்கிறது சங்கம்

யாழ்ப்பாணம், பெப். 4

கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நிவாரணம் வழங்கப்பட்டு வருவதால் அவற்றின் வழமையான வியாபார நடவடிக்கைகள் தடைப்பட்டு வருமானம் இல்லாது போகிறது. இதனால் கூட்டுறவுப் பணியாளர்கள் தமது மாதாந்தச் சம்பளத்தை உரிய நேரத்தில் பெற முடியாதுள்ளது.

இதுவிடயத்தை யாழ். கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம் அரச அதிபரின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளது.

அரசாங்கத்தின் சார்பிலேயே நிவாரணப் பொருள்கள் சங்கங்கள் மூலம் வழங்கப்பட்டு வருவதால் மேற்படி சங்கங்களுக்கு அரச உதவியைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்குமாறு — கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம் யாழ். அரச அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளது.

(ஒ-5)

(இ)

# அப்படி ஓர் எச்சரிக்கை இல்லையாம்

சென்னை, பெப். 4

தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு பராமரிக்கப்படவில்லை என்று மத்திய அரசு தி.மு.க. அரசை எப்போதும் எச்சரிக்கை செய்யவே இல்லை.

இப்படி முன்னாள் முதலமைச்சர் மு. கருணாநிதி தெரிவித்தார்.

(அ-எ)

# மரண தண்டனை

யாழ்ப்பாணம், பெப் 4

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்த செல்வா என்பவருக்கு கடந்த செவ்வாய்க்கிழமை உருத்திரபுரத்தில் வைத்து பகிரங்க மரண தண்டனை வழங்கப்பட்டது.

பணமோசடி மற்றும் பாலியல் உறவுகளில் ஈடுபட்டமை ஆகிய குற்றச் சாட்டுகளுக்காகவே இவர் தண்டிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவருடன் சேர்ந்து பணமோசடியில் ஈடுபட்ட உருத்திரபுரத்தைச் சேர்ந்த விடுதலைப் புலிகள் இயக்க ஆதரவாளர் ஒருவர் மக்கள் முன் அம்பலப்படுத்தப்பட்டு விடுவிக்கப்பட்டார்.

[ஒ]

# வருகிறது; மறைகிறது

கிளிநொச்சி பெப். 4

யாழ்ப்பாணப் பகுதியைப் போலவே கிளிநொச்சியிலும் மண்ணெண்ணெய் விவகாரம் மர்மமாக உள்ளது.

திடீரென விற்பனைக்கு வரும் மண்ணெண்ணெய் திடீரெனவே மறைந்தும் போகிறது கடந்த இரண்டாம் திகதியும் சந்தையில் எண்ணெய்யைக் காண முடியவில்லை ஆனால் கவுனியாவில் இருந்து நேற்று கணிசமான அளவு கொண்டு வரப்பட்டது.

(அ 76)

# பருத்தித்துறை வங்கியில் கொடுப்பனவு

பருத்தித்துறை, பெப். 4

பருத்தித்துறை இலங்கை வங்கிக் கிளை தனது வாடிக்கையாளர்களுக்கு தலா ஆயிரம் ரூபா வழங்கவுள்ளது.

நாளை 5 ஆம் திகதி தொடக்கம் 8 ஆம் திகதி வரை முதற்கட்டமாகவும் 13 ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி வரை இரண்டாம் கட்டமாகவும் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

கொடுப்பனவுகள் தினமும் முதல் நூறு வாடிக்கையாளர்களுக்கு மட்டும் வழங்கப்படும்.

கொடுப்பனவுகள் இரு கட்டங்களாக வழங்கப்படுகின்றபோதும் ஒருவரின் கணக்கிலிருந்து ஒரு தடவையே பணத்தை மீளப்பெற முடியும் எனவும் வாடிக்கையாளர்கள் இக் கிளையில் பண வைப்புச் செய்யுமிடத்து இத்திட்டம் வாராந்தம் அமுல் நடத்தப்படலாம் எனவும் வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-118)

# பல்கலை. மாணவருக்கு எண்ணெய்

யாழ். பல்கலைக் கழகவிடுதி மாணவர்கள் தவிர்ந்த ஏனைய மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் நாளை செவ்வாய்க்கிழமை தலா ஒரு லீட்டர் மண்எண்ணெய் வழங்கப்படவிருக்கிறது.

மறுமலர்ச்சிக் கழகத்தின் ஏற்பாட்டில் கட்டுப்பாட்டு விலைக்கே மண்எண்ணெய் வழங்கப்படுகிறது.

(அ-8)

# அண்ணா நினைவு தினம்

சென்னை, பெப். 4

பேரறிஞர் அண்ணாவின் நினைவுநாள் நேற்று தமிழகத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

அண்ணா சமாதிக்கு தி மு. க. தொண்டர்கள் முன்னாள் முதலமைச்சர் மு கருணாநிதி தலைமையிலும் —

அ. தி.மு.க [ஜெ] பிரிவுத் தொண்டர்கள் முன்னாள் அமைச்சர் வி. ஆர். நெடுஞ்செழியன் தலைமையிலும் —

அ. தி மு. க. 2 பிரிவுத் தொண்டர்கள் முன்னாள் அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் தலைமையிலும் ஊர்வலமாகச் சென்று அண்ணா சமாதிக்கு மலரஞ்சலி செலுத்தினர்.

[அ-எ]

# கொழும்பு விடுதிகளில் தமிழர் வழிகின்றனர்

கொழும்பு, பெப். 4

கொழும்பிலுள்ள ஹோட்டல்கள், லொட்ஜ்கள் பலவற்றிலும் வடபகுதித் தமிழர்கள் நிரம்பி வழிகின்றனர்.

விடுதிகளில் தங்கியிருப்பவர்களில் அனேகமானோர் வெளிநாடுகளுக்குச் செல்ல காத்திருக்கின்றனர் என்றும் இன்னும் சிலர் வெளிநாடுகளில் உள்ள தமது உறவினர்களுடன் தொலைபேசியில் உரையாடக் காத்திருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சில குடும்பத்தினர் மாதக் கணக்கில் விடுதிகளில் தங்கியுள்ளனர் என்று அறியவந்தது.

(ஒ-76)

# பலாலி ஷெல் வீச்சில் வெங்காயப் பயிர் நாசம்

பலாலிசுற்று வட்டாரப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட வெங்காயச் செய்கை பலாலி முகாமில் முகாமில் இருந்து ஏவப்படும் ஷெல் வீச்சுக்களுக்கு இலக்காகி நாசமாகி வருகின்றன.

கடந்த சில தினங்களாக பலாலி இராணுவத்தினர் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி பெருமளவு ஷெல்களை ஏவி வருகின்றனர்.

கடந்த வெள்ளி இரவு அச்சுவேலி, ஒட்டகப்புலம், தொழிற்பேட்டை ஆகிய தோட்டப் பகுதிகளில் ஷெல்கள் விழுந்து வெங்காயப் பயிர் நாசமாகியது.

[ஒ-15]

# ஷெல் தாக்கு

வவுனியா இராணுவ முகாம்களில் இருந்து நேற்று முன்தினம் இரவு 9 மணி தொடக்கம் தாண்டிக்குளம் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ஒ 3)

# பயங்கர ஆயுதங்களையும் பாவிப்பாராம் சதாம்!

போரின் இறுதிக்கட்டத்தில் பேரழிவைத் தரும் பயங்கர ஆயுதங்களை உபயோகிக்க ஈராக் தயங்காது என்று ஜனாதிபதி சதாம் ஹுசேன் நேற்று தெரிவித்தார்.

# ஏவுகணைத் தளங்கள் அழிப்பு

இஸ்ரவேல், சவூதி அரேபியா ஆகிய நாடுகள் மீது 'ஸ்கட்' ஏவுகணைகளைச் செலுத்தும் தளங்கள் இரண்டு ஈராக்கின் தென்மேற்குப் பகுதியில் பன்னாட்டுப் போர் விமானங்களால் அடையாளங் காணப்பட்டு, பின்னர் குண்டுகள் வீசி அழிக்கப்பட்டன என்று அமெரிக்க தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

# தப்பிய வீரர்கள் திரும்பினர்

சுட்டு வீழ்த்தப்பட்ட போர் விமானங்களில் இருந்து உயிர் தப்பிய ஏழு அமெரிக்க விமானிகளை சிரியா அமெரிக்க அதிகாரிகளிடம் ஒப்படைத்தது என்று பக்தாத் வானொலி நேற்று அறிவித்தது.

ஆனால் சிரியா இதனை மறுத்துள்ளது.

# ஈரான் அரசின் பிடிவாதம்

ஈராக் படைகளுடன் சேர்ந்து போரிட விரும்பும் பாகிஸ்தானிய தொண்டர்களைத் தனது நாட்டின் ஊடாக பக்தாத் செல்ல அனுமதிக்கப் பேசுவதில்லை என்று ஈரான் அறிவித்துள்ளது.

வளைகுடாப் போரில் தொடர்ந்தும் நடுநிலைமைகளைக் கடைப்பிடிக்கப்போவதாகவும் ஈரான் அறிவித்திருக்கிறது.

# இஸ்ரவேல் தாக்கும் நிலை!

இஸ்ரவேல் மீது ஈராக் தொடர்ந்து ஸ்கட் ஏவுகணைத் தாக்குதலை நடத்தினால், இஸ்ரவேல் பதில் தாக்குதலை நடத்தும் ஆபத்து ஏற்பட்டிருப்பதாக அமெரிக்கா நேற்று அறிவித்தது.

# பாப்பரசர் எச்சரிக்கை

வளைகுடாப் போர் அபாயகரமான போக்கை அடைந்திருப்பதாக பரிசுத்த பாப்பரசர் நேற்று எச்சரித்தார்.

# ஈராக்கியர் வைராக்கியம்

பன்னாட்டுப்போர் விமானங்கள் தொடர்ந்து ஈராக்கின் இராணுவ நிலைகள் மீது தொடர்ந்து கொடூரமான தாக்குதலை நடத்தியும், குவைத்தில் இருந்து ஈராக்கிய படைகள் வெளியேறும் அறிகுறி எதுவும் காணப்படவில்லை என்று பிரிட்டிஷ் ராணுவ உயர் அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

குவைத்திலும் ஈராக்கிலும் ஈராக் குடியரசு காவலர்கள் மனம் தளராமல் தங்கள் நிலைகளில் தொடர்ந்தும் இருந்து வருகின்றனர் என்றும் அவர் சொன்னார்.

# குண்டுமாரி இன்னிசையாம்!

பன்னாட்டுப் போர் விமானங்களின் குண்டுமாரி ஓசை "இன்னிசையாக" தங்களுக்கு இருப்பதாக குவைத் பிரசை ஒருவர் குவைத் நகரில் இருந்து பி பி சி வானொலிக்கு தொலைபேசி மூலம் அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்தார். குவைத்தின் விடுதலையை எதிர்பார்த்திருப்பதாகவும் அவர் கூறினார்.

# அலைந்து திரிவார்களாம்!

குவைத்தில் உள்ள ஈராக்கிய படையினர் போர் முடிந்த பின்னர் ஈராக்குக்குத் திரும்ப முடியாது அலைந்து திரியும் நிலைதான் ஏற்படும் என்று அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் டிக்செனி நேற்று டெலிவிஷன் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் எச்சரித்தார்.

# களத்தில் 28,000 பெண்கள்

வளைகுடாவில் உள்ள பன்னாட்டுப் படைகளில் சுமார் 28 ஆயிரம் பெண் சிப்பாய்களும் பணி புரிவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சவூதி நகர் அல்ஹாஃஜியை பிடிக்க நடந்த சண்டையின் போது அமெரிக்க பெண் சிப்பாய்கள் சிலர் ஈராக்கினால் சிறைப்பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த எண்ணிக்கை வெளியிடப்பட்டது.


# அடக்க ஆராதனை

## டேவிட் அரியம்

இலங்கை பெந்தெகொஸ்தே சபைத் தேவ ஊழியராகிய சகோதரன் டேவிட் அரியம் அவர்களது அடக்க ஆராதனை இன்று (04-02-91) மாலை 3.00 மணிக்கு சுண்டுக்குளி இலங்கை பெந்தெகொஸ்தே சபைச் சாலையில் இடம்பெற்றபின், நல்லடக்கத்துக்காக வசந்தபுரம் ஷேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இலங்கை பெந்தெகொஸ்தே சபை,
111, கண்டி வீதி,
சுண்டுக்குளி.

தகவல்:
சகோதரன் பொணிவெஸ்ஷர்

(15417)

# மரண அறிவித்தல்

## கந்தையா சண்முகசுந்தரம்

(பெயின்ரர் - முடமாவடி)

சங்கானையைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி கிழக்கு முடமாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சண்முகசுந்தரம் காலமானார்.

அன்னார் கோமளாதேவியின் அன்புக் கணவரும், லாலசொரூபி சிறிகாந்தன் - சிறிபாலகுமார் (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலம்சென்ற கந்தையா - சிவகாமியம்மாவின் அன்பு மகனும், காலம்சென்ற குமாரசாமி - பூரணம் ஆகியோரின் அன்பு மருமகனும், விஜயரட்னம், காலம்சென்ற தயாபரன், மகேந்திரன், செல்வராணி ஆகியோரின் சகோதரனும், சோமாவதி, பத்மாவதி, மங்களேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

ஈமக்கிரியைகள் 4-2-91 திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

சங்கிதா வீதி,
திருநெல்வேலி கிழக்கு.
முடமாவடி.

தகவல்:
கோமளாதேவி (குணம்)
(மனைவி)

[154 6]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உதயன்

## விழிப்புணர்வு கனியட்டும்

பெப்ரவரி நான்காம் திகதி இன்று. பிரித்தானியாவிடமிருந்து இலங்கை சுதந்திரம் பெற்ற நாளாகக் கொள்ளப்படும் தினம்.

43 வருடங்களுக்கு முன்னர் இலங்கைக்குக் கிடைத்த சுதந்திரம் பெரும்பான்மையினரான சிங்களவர்களுக்கே உரியதாக்கப்பட்டது. தமிழர்களைப் பொறுத்த மட்டில் ஆளும் இனம் ஆள் மாறியது; பிரிட்டிஷாரிடமிருந்து சிங்களவர்களுக்கு ஆட்சி அதிகாரம் கைமாறியது. வாளேந்திய சிங்கக் கொடியை தேசியக் கொடியாக நிர்ணயித்த போதே, சுதந்திரம் சிங்களவர்களுக்கு மட்டுமே; மற்றைய இனங்களுக்கல்ல என்பது மறைமுகமாக உணர்த்தப்பட்டது.

அன்றைய தமிழ் அரசியல்வாதிகள் எனப்பட்டோர் அதனைத் தெரிந்திருந்தனர்.

ஆனால் அந்தக் காலத்தில் பேருக்கும், புகழுக்கும், பொருளுக்கும் அரசியல் நடத்திய அவர்களால் தேசியக் கொடி என்ற ஆரம்பப் புள்ளி, தமிழர்களைப் பூரண அடிமையாக்கும் அளவுக்கு விரிந்து விஸ்தீரணம் அடையும் என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. உண்மையான அரசியல் தீர்க்க தரிசனம் இருக்கவில்லை.

தமது சொந்தப் பதவி, அந்தஸ்து என்பன கருதி சிங்களவர்களோடு சேர்ந்து சுயலாபம் தேட விழைந்தார்கள்; சிங்கள அதிகாரபீடம் போடும் அற்ப சலுகைகளோடு திருப்திப்பட்டு, தமது வாழ்வை வளம்படுத்தினார்கள்.

அந்தப் பலவீனத்தைப் பசளையாக்கி, சிங்கள - பௌத்த பேரினவாதம் மளமளவென வளரத்தொடங்கியது. அதன் அளவுக்கு விஞ்சிய வளர்ச்சியால், தமிழர்கள் தமது சொந்த மண்ணுக்குத் தானும் உரித்துடையவர் அல்லர்; அந்த உரிமையை அவர்களுக்கு வழங்கக்கூடாது என்று திட்டமிட்டுச் செயலாற்றும் அளவுக்கு இப்போதைய சிங்களச் சந்ததி வளர்ந்துள்ளது.

1956 இல் கொண்டு வரப்பட்ட தனிச் சிங்களச்சட்டத்தால் தமிழர் மத்தியில் அரசியல் விழிப்புணர்ச்சி அரும்பத் தொடங்கியது. அந்த அரும்பு பல்வேறு கட்டங்களையும், கஷ்டங்களையும் கடந்து இப்போது காயாகி முற்றிக் கொண்டிருக்கிறது.

தமிழரின் இந்த அரசியல் விழிப்புணர்ச்சியைக் கண்டு அஞ்சி, கொழும்பு அரசு அவர்களை அழித்தொழித்து விடுவதன் மூலமே உரிமைப் போராட்டத்தை ஒடுக்கலாம் எனக் கணக்குப் போட்டிருக்கிறது. இராணுவத் தாக்குதல், பொருளாதாரத் தடை, உளவியல் போர் என்ற யாவும் அந்தக் கணக்கின் உத்திகளே.

இந்த உத்திகளைக் கண்டு மனம் சோராமல் தமிழர்கள் தமது உரிமைப் போராட்டத்தை மேலும் முன்னெடுத்தாக வேண்டும். சுயநலம் சுகபோகம், சந்தர்ப்பவாதம், அடிமைப் புத்தி, அவநம்பிக்கை ஆகியன களைந்து தன்னம்பிக்கையும், தளரா உறுதியும், மனவலிமையும் வளர்க்கப்பட வேண்டும். அதன் மூலமே 43 வருட கால சிங்கள அடிமைத்துவத்தில் இருந்து மீண்டு, புத்தெழுச்சி காண முடியும்.

இதே பெப்ரவரி 4 இல் உயிர் நீத்த தியாகி திருமலை நடராஜன், மாவீரன் சாள்ஸ் அன்ரனி முதற் கொண்டு இந் நாளில் களத்தில் மடியும் மாவீரன் வரையான இளம் நெஞ்சங்களுக்கு இருந்த மனஉறுதி, அடிமை விலங்கை உடைத்தெறிய வேண்டும் என்ற விழிப்புணர்வு எல்லாத் தமிழர் மனங்களிலும் மலர்வதாக.

# மேலும் ஒரு மாதம் நிவாரணத்தை நீடிக்க ஒய்வூதியர் கோரிக்கை

## செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுமூலம் மகஜர்

யாழ்ப்பாணம், பெப் 4

பாதிக்கப்பட்ட, சகலருக்கும் தற்போது வழங்கப்பட்டு வரும் நிவாரணம் மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிக்கப்பட வேண்டும்.

நல்லூர் ஒய்வூதியர் சங்கம், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மூலம் மேற்கண்ட கோரிக்கையை அரசாங்கத்துக்கு விடுத்துள்ளது.

கடந்த ஜூன் மாதம் தொடக்கம் ஒய்வூதியர்களுக்கு ஒய்வூதியம் சீராக வழங்கப்படவில்லை என்றும் இலருக்கு பகுதி, பகுதியாகவும் இலருக்கு காசோலையாகவுமே வழங்கப்பட்டுள்ளது என்றும் நவம்பர், டிசம்பர், ஜனவரி மாத வவுச்சர்கள் கூட இதுவரை ஒய்வூதியர்களுக்கு வழங்கப்படவில்லை என்றும் சங்கச் செயலாளர் திரு. பி. எஸ். திருச்செல்வம் தெரிவித்தார்.

இப்படியான நிலையில் 1500 ரூபா வருமானத்துக்கு மேற்பட்டோருக்கான நிவாரணத்தை நிறுத்துவது ஒய்வூதியர்களுக்குப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் —

அரசாங்கம் தமது கோரிக்கையைத் தட்டிக் கழிக்குமானால் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் மூலம் இலவச உலர் உணவுப் பார்சல்களை ஒய்வூதியர்களுக்கு வழங்கும்படி யாம் செஞ்சிலுவைச் சங்கத்தைக் கோரி உள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (இ)

# வெள்ளத்துக்கு ஒருவர் பலி

மன்னார், பெப்: 4

சமீபத்தில் மன்னார்ப் பகுதியில் பெய்த பெருமழையின் போது ஒருவர் மரணமானார்.

தேவன்பிட்டியைச் சேர்ந்த குடும்பஸ்தரான பத்மநாதன் என்பவரே இறந்தவர் ஆவார்.

ஊற்றங்கரை ஆற்றை இவர் கடந்த சமயம் வெள்ளத்தால் அள்ளுண்டு செல்லப்பட்டு பின்னர் இவரது சடலம் மீட்கப்பட்டது. (இ)

# கலைப்பீட பரீட்சை முடிவுகள் வெளியாகின

யாழ்ப்பாணம், பெப். 4

யாழ். பல்கலைக்கழகத்தின் 1989 ஆம் ஆண்டுக்கான கலைப்பீடத்துறை பரீட்சைகளின் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

அதன்படி 1989 ஆம் ஆண்டுக்கான முகாமைத்துவ நெறி பகுதி I பரீட்சையில் 54 பேரும், முகாமைத்துவ நெறி பகுதி II பரீட்சையில் 35 பேரும் வர்த்தக பட்டப் பரீட்சை பகுதி I பரீட்சையில் 83 பேரும், வர்த்தக பட்டப் பரீட்சை பகுதி II பரீட்சையில் 52 பேரும், கலைத்துறை பட்டப்பரீட்சை (விசேஷ) பகுதி I பரீட்சையில் 88 பேரும், கலைத்துறை பட்டப் பரீட்சை (விசேஷ) பகுதி II பரீட்சையில் 61 பேரும், கலைத்துறைப் பட்டப் பரீட்சை (பொது) பகுதி I பரீட்சையில் 87 பேரும் சித்தி அடைந்துள்ளனர்.

சில மாணவர்களின் பெறுபேறுகள் வெளியிடப்படவில்லை. (இ-5)

# தமிழகத்தில் வன்செயல்கள் 4 ஆயிரம் பேர் கைதாகினர்

தி. மு. க. அரசு கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து தமிழகத்தில் வன்செயல்கள் இடம்பெற்று வருகின்றன.

கடந்த புதன் கலைஞர் ஆட்சி கவிழ்க்கப்பட்டதைத் தொடர்ந்து முன் எச்சரிக்கை நடவடிக்கையாகக் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 4 ஆயிரத்தைத் தாண்டி விட்டது என்று அறிவிக்கப்பட்டது.

வேலூரில் ஓடிக்கொண்டிருந்த அரசு பஸ் ஒன்றின் மீது நாட்டு வெடிகுண்டு வீசப்பட்டதாகவும் அச்சம்பவத்தில் நான்கு பேர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

சேலம், திருநெல்வேலி ஆகிய நகரங்களில் ஆறு லொறிகளை விஷமிகள் தீக்கிரையாக்க முயற்சித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. [இ-எ]

# இஸ்ரவேல் மீதான ஏவுகணை தாக்குதல் தொடர்கிறது

வளைகுடாப் போரின் பதினெட்டாவது தினமான நேற்று சவூதி அரேபியா மற்றும் இஸ்ரவேல் மீது ஈராக் மீண்டும் ஸ்கட் ஏவுகணைத் தாக்குதலை நடத்தியது.

இஸ்ரவேல் மீது ஏவப்பட்ட இரண்டு ஸ்கட் ஏவுகணைகளில் ஒன்று தலைநகர் டெல் அவிவின் மேற்கு பகுதியில் விழுந்து வெடித்தது.

மற்றது, கைப்பற்றப்பட்ட மேற்குக் கரையோரப் பிரதேசத்தில் விழுந்து வெடித்தது. ஸ்கட் ஏவுகணைத்தாக்குதலுக்குள்ளான சரியான இலக்குகளை இஸ்ரவேல் அரசு பாதுகாப்பு காரணங்களுக்காக வெளியிடவில்லை.

சவூதி தலைநகர் ரியாத் மீது ஏவப்பட்ட ஸ்கட் ஏவுகணையை 'பேட்ரியட்' எதிர்ப்பு ஏவுகணை நடுவானில் வழிமறித்துத் தாக்கி அழித்தது. நடுவானில் வெடித்துச் சிதறிய 'ஸ்கட்' ஏவுகணையின் சிதறல்கள் கீழே விழுந்ததில் 20 பேர் காயமடைந்தனர்.

## போரை நிறுத்த ஈரான் முயற்சி

போரை முடிவுக்குக் கொண்டு வர தன்னாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளப்போவதாக ஈரான் ஜனாதிபதி ரப்சஞ்சானி அறிவித்துள்ளார்.

## சதாமின் பிடிவாதம்

குவைத்தை விட்டு ஈராக் ஒருபோதும் வெளியேறப் போவதில்லை என்று ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைன் மீண்டும் வலியுறுத்தியிருப்பதாக பக்தாத் வானொலி அறிவித்தது.

## 2 விமானங்கள் சுடப்பட்டன

பஸ்ரா நகர் மீது தாக்குதல் நடத்திய அமெரிக்க போர் விமானங்களில் இரண்டை ஈராக் சுட்டு வீழ்த்தியதாக பன்னாட்டுப் படைகள் ஒப்புக்கொண்டன.

## 3ஆம் உலகப் போர் ஆபத்து

வளைகுடாப் போர் மூன்றாவது உலக மகாயுத்தத்தை நோக்கிச் சென்று கொண்டிருப்பதாக லிபிய ஜனாதிபதி கடாபி எச்சரித்திருக்கிறார்.

வளைகுடாப் போர் சோவியத் யூனியனின் எல்லைப்புறத்துக்கு பரவும் போது, மூன்றாம் உலகயுத்தத்துக்கு நாடுகள் அணிதிரள்வது ஆரம்பமாகலாம் என்றும் அவர் சொன்னார். வளைகுடாப்போர் பேராசை பிடித்தவர்களால் நடத்தப்படும் ஒன்றாக அமைந்துள்ளது என்றும் லிபிய ஜனாதிபதி கடாபி சொன்னார். (இ-எ)

# பொருளாதார அடக்கு முறைகள் திருமலைத் தமிழர் மீது திணிப்பு

## ஜனசக்தி உதவிகளுக்கும் ஆப்பு

திருகோணமலை, பெப். 4

திருகோணமலையில் வாழும் தமிழர்கள் பல வழிகளிலும் ஸ்ரீலங்கா அரசின் பொருளாதார நெருக்கடிகளுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர் என்று அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வோருக்கான ஜனசக்திக் கொடுப்பனவுகளும் திருமலைத் தமிழர்களுக்கு நிறுத்தப்பட்டுள்ளன.

இராணுவ நடவடிக்கைகளால் ஏற்கனவே உளரீதியாகவும், உடல் ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ள இந்த மக்கள் தற்போது ஸ்ரீலங்கா அரசின் பொருளாதாரப் பிடிக்குள் சிக்குண்டு வருகின்றனர்.

திருகோணமலை அரசாங்க அதிபர், கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையத்துக்கு வழங்க வேண்டிய கடந்த வருடக் கொடுப்பனவுகளை வழங்கவில்லை என்றும் —

ஜனசக்தி திட்டத்தின் கீழான உணவுப் பொருள்களை வழங்குவது தடைப்படுவதற்கு இதுவே காரணம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஜனசக்தி குடும்பங்களைச் சேர்ந்த குடும்ப அங்கத்தவர் இராணுவ முகாம்களுக்கு கட்டாயமாக அழைக்கப்பட்டு வேலை வாங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ நடமாட்டம் உள்ள பகுதிகளில் வாழும் அப்பாவித் தமிழ் விவசாயிகள் பயிர்ச்செய்கையில் ஈடுபடவும் படையினர் தடைவிதிக்கின்றனர். இப்படியான பகுதிகளில் இருந்து நாளாந்தம் கூலி வேலைக்குச் செல்லவும் தமிழ்த் தொழிலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்படுகிறது என்று தெரிவிக்கப்படுகிறது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

வேப்பெண்ணெய் வீட்டில் விளக்கெரிக்கக் கண்ணுக்குக் குளிர்ச்சி - மருந்தாகப் பாவிக்க; போத்தல் ரூ. 80/- மட்டுமே. திருநெல்வேலி, இணுவில், யாழ். நவீன சந்தை அண்ணா கோப்பி கடைகளிலும் விற்பனையாகிறது. மிகவும் மலிவு.

(C/5711)

4 பரப்பு வீட்டுடன் காணி அச்சுவேலி தெற்கில் மகிழடி வயிரவர் கோவில் முன் உள்ளது. சற்குருநாதன் 2 ஆம் நம்பர், திருவள்ளுவர்சாலை, கந்தர்மடம். யாழ்ப்பாணத்தில் தொடர்பு கொள்க.

(15750)

### நாற்றுக் கன்றுகள்

எம்மிடம் சிறந்த இன விதை எலுமிச்சை, ஒட்டுத் தோடை நாற்றுக்கன்றுகள் விற்பனைக்குண்டு. ஐம்பது நாற்றுக்களுக்குமேல் தொகையாக எடுப்பவர்களுக்கு கழிவு உண்டு. சைவ வித்தியா விருத்திச் சங்கம் கலாசாலை வீதி, திருநெல்வேலி.

(C/5720)

### வாங்கலாம் விற்கலாம்

பழைய புத்தகங்கள், கொப்பிப் பேப்பர், சிமெந்து கோழித்தீன் உறை, பித்தளைச் செப்பு, போத்தல் வகைகள் வாங்கப்படும், விற்கப்படும். சேனாதிராசா, Second Hand Book House, 57, ஸ்ரான்லி வீதி, இலங்கை வங்கிக்கு முன்னேன், யாழ்ப்பாணம்.

(15711)

### சோதிட மாந்திரீக நிபுணர்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கண்டாலோசியுங்கள். "சக்தி சரவணா" 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [யாழ்ப்பாண இந்துக் கல்லூரி மைதானம் முன்பாக] தினசரி பகல் 9 மணி தொடக்கம் 8 மணி வரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை.

[15726]

### தனிப்பட்ட பிரத்தியேக வகுப்புகள்

G. C. E. (A/L) பௌதிகவியல், தூயகணிதம், பிரயோககணிதம் பல ஆண்டுகளாக கற்பித்து வரும் ஆசிரியரினால் தனிப்பட்ட முறையில் ஏராளமான பயிற்சிகளுடன் விசேஷமாகக் கற்பிக்கப்படும். நூலக வசதியும் உண்டு. விபரங்களுக்கு பாலாமாஸ்டர் B.Sc. (Cey) 17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(15414)

### தேவை

கழுவித் துப்புரவு செய்யப்பட்ட முழு/அரைப் போத்தல்கள் தேவை, மில்க்வைற். யாழ்ப்பாணம்.

(C/5710)

### தரன் ஸ்ருடியோ

றபர் சீல், கலர் - கறுப்பு-வெள்ளை பாஸ்போர்ட், அடையாள அட்டை, 12''X10'' படங்கள், பிளாஸ்ரிக் விளம்பர போட் மற்றும் ஓவிய வேலைகளுக்கு 24, யாழ். வீதி. (ரெட்னா வீதி) யாழ்ப்பாணம்.

(15710)

### விநாயக திருமணசேவை

எம்மிடம் செவ்வாய் குற்றமுள்ள டாக்டர், பொறியியலாளர். இன்னும் பல தொழிலுடைய குறிப்புகள் உண்டு. கடித மூலம் / நேரில் சுவாமியார் இராசகுலசிங்கம் 53/5, அன்னசத்திர ஒழுங்கை கந்தர்மடம்.

(15752)

### பரதநாட்டிய வகுப்பு

பரதநாட்டியம் பயில விரும்பும் மாணவிகள் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9.00 மணிமுதல் 11.30 வரை தொடர்பு கொள்ளுங்கள். 230, நாவலர் வீதி, (இலுப்பையடி சந்திக்கு அருகாமை) யாழ்ப்பாணம்.

(சி/5712)

## நொதேண்

(சுண்டிக்குளி)

## O/L

10ம், 9ம், 8ம், 7ம், 6ம் ஆண்டுக்குரிய 2ஆவது பிரிவுகள்

ஆரம்பம்:

## 05-02-1991

(15754)

## அஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம், பெப். 4

அண்மைய நில அழிப்பில் பலியான யாழ். பல்கலைக் கழக இறுதி ஆண்டு மாணவர்கள் என். கிருபாகரன் (முகாமைத்துவம்) சி. தயாளன் (கலை) ஆகியோருக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக நாளை செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் அஞ்சலிக் கூட்டம் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக மட்டு — அம்பாறை மாவட்ட மாணவர் ஒன்றியம் இதனை ஏற்பாடு செய்துள்ளது.

(இ-5)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 04 - 02 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## அரசியல் கட்சிகள் மாநாடு

அதிகாரப் பரவலாக்கல் மற்றும் வடக்கு - கிழக்கு மாகாண விவகாரம் ஆகியன தொடர்பாக இறுதி முடிவுகளை எடுப்பதற்காக அனைத்து அரசியல் கட்சிகள் மாநாட்டை இம்மாதம் 16 ஆம் திகதி ஜனாதிபதி பிரேமதாஸா கூட்டவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

[இ - எ]

## விடுதி வசதி

யாழ்ப்பாணம், பெப்: 4

மருதனார் மடத்தில் அமைந்துள்ள இராமநாதன் நுண்கலைப்பீட மாணவிகளுக்கு விடுதி வசதி செய்து கொடுக்கப்பட உள்ளது.

[இ - 6]

## 16 ஆம் நாள் நினைவு தினம்

## திரு. க. நடராஜாஐயா

பிரபல சாற்றுப்படி அமைப்பாளர் திரு. க. நடராஜாஐயா அவர்கள் 22-01-91 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார். 06-02-91 புதன் கிழமை அன்னாரின் பாஷாண உத்வாசனம் காலை 8.00 மணிக்கும் சபிண்டீகரணம் பகல் 12.00 மணிக்கும் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

இங்ஙனம்:
பிள்ளைகள்

ந. விஜயரத்தின ஐயா
ந. சிவனேசக்குருக்கள்.

புதுக்குளங் களப் -
பிள்ளையார் கோவிலடி,
அல்வாய்.

(15748)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



## செல்வநாயகம் செல்வச்சந்திரன்

(சாம்சன்)

வீரஜனனம்: 26 - 04 - 1971
வீரமரணம்: 22 - 12 - 1990

படித்துப் பட்டம் பெறவேண்டிய உன் வாழ்வை விடுதலைக்காக அர்ப்பணிக்கச் சென்றாயே. எம் நினைவுக் கோவிலில் நித்தம் எரியும் நிர்மல ஜோதியே சந்திரா, நீ மறைந்து ஒருமுறை மாதங்கள் சென்றாலும் நிரந்தரமாய் எம் மனதில் வீற்றிருக்கிறாய்.

உன் பிரிவால் வாடும்:
மச்சான்மார், மச்சாள்மார்,
அக்கா, பிள்ளைகள்.

(15753)

## யாழ்ப்பாணக்கல்லூரி - வட்டுக்கோட்டை

## பதவிகள் வெற்றிடம்

யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆரம்பப் பாடசாலையிலும், மத்திய பாடசாலையிலும் தமிழ், ஆங்கிலம், சமூகக்கல்வி போதிக்கப் பயிற்றப்பட்ட ஆசிரியர்களிடமிருந்தும், பட்டதாரிகளிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப் படிவங்களை கல்லூரி அலுவலகத்திற் பெற்றுப் பூர்த்தி செய்து, 01 - 03 - 1991 க்கு முன்னர் சமர்ப்பிக்கவேண்டும்.

அதிபர்.

யாழ்ப்பாணக்கல்லூரி,
வட்டுக்கோட்டை.

(சி/5723)

## நன்றியோடு நினைவு கூருகின்றோம்



## கே. எஸ். திரவியம்

''கடமை செய்தாய்
கருத்தாய் ஜீவித்தாய்
உனக்கென நியமித்த ஓட்டத்தையும்
பொறுமையோடே ஓடினாய்''

இனிய உமது நினைவுகள் இன்றும்
எம் உள்ளத்தை நிறைத்து நிற்கின்றதையா
நன்றி நிறைந்த உள்ளங்களோடு
உம் நினைவால் இறையை போற்றி
நிற்கின்றோம்.

பிள்ளைகளும், குடும்பத்தினரும்.

99, சிவப்பிரகாசம் வீதி,
யாழ்ப்பாணம்.

[சி/5724]

## மரண அறிவித்தல்

## கதிரேசர் குமாரசாமி

(முன்னாள் தலைமை ஆசிரியர்)

சாவகச்சேரி, மட்டுவில் தெற்கு கதிரேசர் குமாரசாமி காலமானார். இவர் இராசம்மாவின் அன்புக் கணவரும், சிவயோகநாதன் (மேற்கு ஜேர்மனி), தயாளவதி, சாந்தநாயகி (நிதிக்கிளை/யாழ்.பல்கலைக்கழகம்) சவுந்தரநாயகி, பத்மாசனி (மே. ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், றோஸ்மலர் (மே.ஜேர்மனி), மயில்வாகனம், குலசிங்கம் [யாழ்.மாநகரசபை], கணேசமூர்த்தி [கனடா], தர்மகுலசிங்கம் (மே. ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், Dr. நல்லையா பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னாரின் சமக்கிரியைகள் சாவகச்சேரியில் நேற்று (3 - 2 - 91) நடைபெற்றது.

மட்டுவில் தெற்கு, தகவல்: மனைவி.
சாவகச்சேரி.

(15755)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org